முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1355

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.06.2023, வியாழக்கிழமை

1. கந்தமூல எந்தன் மகா சூட்சுமமே
   கருணையே வடிவாக வந்த ஞானசொரூபமே
   சிந்தைவைத்து என் சக்தியாகவே
   சூட்சும வடிவம் கொண்ட ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 32 ம் நாள், 15.06.2023, வியாழக்கிழமை)
   வரமென அரங்கன் நீ வந்த நோக்கம்
   வையகத்தில் அரங்கேறி வருதல்காண
3. காணவே உன் ஞானம் சித்தியாகும்
   கருணைகொண்ட உன் தர்மம் வெற்றி காண்கும்
   ஞானம் வேண்டி உன்வழி வருபவரெல்லாம்
   ஞாலமதில் ஞானிகளாக ஆற்றல்பெருகக் கூடும்
4. கூடவே அற்புதத்தை கோட்டையாம்
   ஏழாம் படைவீட்டில் இருந்து
   நாடெங்கிலும் சரவணச்சுடரின் வழி
   ஞானமாக ஆறுமுகன் யான் பரவி வருகின்றேன்
5. வருகவே எங்கு அரங்கன் பேரில்
   வல்லமைபட தர்மம் நடக்கின்றதோ
   தர்மத்தோடு ஞானிகள் பூஜையும்
   தக்கபடி சுத்த சன்மார்க்கக் கொள்கையும்
6. கொள்கையும் வேதமாக
   குருராஜன் அரங்கன் நீ தருகின்ற
   ஆளுமையாக மகா சக்தியாக
   அகிலத்தில் எங்கு இந்த சக்தி நிலைத்து நிற்கின்றதோ
7. அங்கெல்லாம் ஆறுமுகன் யான் வெளிப்படுவேன்
   அவர்களுக்கெல்லாம் ஆறுமுகன் யான் ஞானம் என்கின்ற
   நிறைவான முழுமை நிறைந்தநல்
   நெறியாக உன் சக்திவழி இறங்கி

8. இறங்கி அவர்களைக் கொண்டே
இந்த உலகில் இணையில்லாத ஞானஆட்சிதனையும்
குறைவில்லாத ஞானசித்தர் காலத்தையும்
குவலயம் அடைய வகைசெய்து பேரற்புதம் புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–